**தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு தொகுதி - IIA போட்டித் தேர்வு நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்தார்..**




தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு-II (Non Interview – Posts) (Group-IIA Services) போட்டித் தேர்வு (2014-15 மற்றும் 2015-16) தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி மற்றும் அரூர் கோட்டங்களில் இன்று (24.01.2016) நடைபெற்றது.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் இலக்கியம்பட்டி அரசு பெண்கள், ஆண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் தேர்வு எழுதும் மையங்களையும் மற்றும் ஜெயம் பொறியியல் கல்லூரியில் தேர்வு எழுதுபவர்களை சென்னையிலிருந்து ஆன்லைன் மூலம் கண்காணிக்கப்படுவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்பு தேர்வு மையங்களில் தேர்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முழு அளவில் செய்யப்பட்டுள்ளதா என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

தருமபுரி கோட்டத்திற்குட்பட்ட 54 மையத்தில் மொத்தம் 21667 தேர்வர்கள் தேர்வெழுத ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவர்களில் 17506 தேர்வர்கள் தேர்வில் கலந்து கொண்டு தேர்வு எழுதினர் தேர்வில் கலந்து கொள்ளாதவர்கள் 4161 நபர்கள்.

அரூர் கோட்டத்தில் மொத்தம் 9020 தேர்வர்கள் தேர்வெழுத ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவர்களில் 7301 தேர்வர்கள் தேர்வில் கலந்து கொண்டு தேர்வு எழுதினர்.

தருமபுரி மாவட்டத்தில் தேர்வு எழுத விண்ணப்பித்தவர்கள் 30687 அதில் வருகை புரிந்தவர்கள் 24807 வராதவர்கள் 5880 ஆகும்.

தேர்வு எழுத வரும் விண்ணப்பதாரர்கள் தேர்வு மையத்தில் **கைபேசி, கால்குலேட்டர் மற்றும் எலக்ட்ரானிக் கைகடிகாரம் (Digital watch)** போன்ற தகவல் பரிமாற்ற உபகரணங்கள் பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை. தருமபுரி மாவட்டத்தில் அனைத்து இடங்களிலும் தேர்வு நடவடிக்கைகள் வீடியோ கேமரா மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைகேடுகள் இல்லாமல் தேர்வு நடைபெறுவதை கண்காணிக்க சிறப்பு பறக்கும் படைகள் அமைக்கப்பட்டடு கண்காணிக்கப்பட்டன.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி.